# திருக்குறள் திறன் போட்டி 2020

## திருக்குறள் திறன் போட்டி 2020 – தமிழ்ச்சோலை மட்டப் போட்டி நடைமுறைகள்

தமிழ்ச்சோலைப் பள்ளி மட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் அனைத்துப் பிரிவுகளின் போட்டியாளர்களும், தமது பிரிவுக்குரிய அனைத்துக் குறள்களையும் மனப்பாடம் செய்து, ஒப்புவித்தல் வேண்டும். இதன்போது அவர்களது

- மனனம்
- ஒலிப்பு
- பலுக்கல்
- உணர்வு
- நிலை

என்பன கவனிக்கப்பட்டு அதன் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

அதிகாரம், அதிகார எண் என்பனவற்றைக் குறிப்பிடும் மாணவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். **(அதிபாலர் பிரிவு, பாலர் பிரிவு, கீழ்ப்பிரிவு மாணவர்கள் அதிகார எண்களைக் குறிப்பிடத் தேவையில்லை)**

## திருக்குறள் திறன் போட்டி 2020 – திணைக்களமட்டப் போட்டி நடைமுறைகள்

**அதிபாலர் பிரிவு :** திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் இரண்டு குறள்களைக் கூற வேண்டும்.

---

**பாலர் பிரிவு :** திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் இரண்டு குறள்களுடன் ஐந்தாவது குறளையும் அதன் பொருளையும் கூறவேண்டும்.

**(திருவுளச்சீட்டில் குறளின் முதற் சொல் மட்டும் எழுதப்பட்டிருக்கும்)**

---

**ஏனைய பிரிவுகள் (கீழ்ப்பிரிவு, நடுவண் பிரிவுகள், மேற்பிரிவுகள், உயர் பிரிவு, அதிஉயர் பிரிவு) :**

திருவுளச் சீட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் **குறள்களில் உள்ள முதற் சொல் தவிர்ந்த வேறு ஏதாவது ஒரு சொல்லைக் கொடுத்துக்** குறள்கள் கேட்கப்படும். இதன்போது போட்டியாளரின்

- **மனனம்**
- **ஒலிப்பு**
- **பலுக்கல்**
- **உணர்வு**
- **நிலை**

என்பன கவனிக்கப்பட்டு அதன் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

**திணைக்களமட்டப் போட்டியின்போது பார்வையாளர்கள் உள்நுழைய இசைவளிக்கப்படமாட்டார்கள்.**

**(அதிபாலர் பிரிவு, பாலர் பிரிவு, கீழ்ப்பிரிவு மாணவர்கள் அதிகார எண்களைக் குறிப்பிடத் தேவையில்லை.)**

# திருக்குறள் திறன் போட்டி 2020

## திருக்குறள் திறன் போட்டி 2020 – இறுதிப் போட்டி நடைமுறைகள்

**அதிபாலர் பிரிவு :** திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் இரண்டு குறள்களைக் கூற வேண்டும்.

---

**பாலர் பிரிவு :** திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் இரண்டு குறள்களுடன் ஐந்தாவது குறளையும் அதன் பொருளையும் கூறவேண்டும்.
**(திருவுளச்சீட்டில் குறளின் முதற் சொல் மட்டும் எழுதப்பட்டிருக்கும்)**

---

**ஏனைய பிரிவுகள்** (கீழ்ப்பிரிவு, நடுவண் பிரிவுகள், மேற்பிரிவுகள், உயர் பிரிவு, அதிஉயர் பிரிவு) **:**

- திருவுளச் சீட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் **குறள்களில் உள்ள முதற் சொல் தவிர்ந்த வேறு ஏதாவது ஒரு சொல்லைக் கொடுத்துக்** குறள்கள் கேட்கப்படும்.
- அதிகாரத்தைக் குறிப்பிட்டு அதிகார எண் கேட்கப்படும் (**கீழ்ப்பிரிவு நீங்கலாக**).
- குறிப்பிட்ட குறளுக்குரிய அதிகாரத்தைக் கூறுமாறு கேட்கப்படும்.
- குறள்களின் பொருள்களுக்குரிய விளக்கம் தொடர்பான வினாக்கள் வினவப்படும்.

இதன்போது போட்டியாளரின்

- மனனம்
- ஒலிப்பு
- பலுக்கல்
- உணர்வு
- நிலை

என்பனவும் கவனிக்கப்பட்டு அதன் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

**(அதிபாலர் பிரிவு, பாலர் பிரிவு, கீழ்ப்பிரிவு மாணவர்கள் அதிகார எண்களைக் குறிப்பிடத் தேவையில்லை.)**